DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : கணேசன் | Father/Husband Name : ராமசாமி |
| Age : 48 | Village : சிவகாசி |
| Taluk : | Calling : கிராம நிர்வாக அலுவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18 Mar 2026 14:30

(A1, A2 charge abated. Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது தாயில்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து சல்வார்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி, காயல்பட்டி கிராம நிர்வாக பொறுப்பு அலுவலராக பணியில் இருந்தேன்.

2. 04.04.2019 ஆம் தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில் தாயில்பட்டி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் நானும் தலையாரி பாலசுப்பிரமணியன் என்பவரும் இருந்தபோது தாயில்பட்டி கிராமம் கலைஞர் காலனியில் வெடி விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்தது. நாங்கள் சுமார் 02.15 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது 1வது எதிரி முருகேசன் வீட்டில் தீயணைப்பு துறையினர் வந்து தீயை அணைத்த நிலையில் இருந்தது. அந்த இடத்தில் சோல்சா வெடிகள் எரிந்து அணைந்த நிலையில் இருந்தது. பின்னர் விசாரித்தது 1வது எதிரி முருகேசன் அரசு அனுமதியில்லாமல் சரவெடி தயார் செய்து அதை பரிசோதனை செய்து பார்த்தபோது தீப்பொறி பட்டு விபத்து ஏற்பட்டதாக தெரியவந்தது.

3. நான் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க கேட்டு வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

4. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் காலத்தில் நான் சிவகாசியில் குடியிருந்து வந்தேன். அரசு விதிகளின்படி எங்கு பணிபுரிகின்றமோ அங்குதான் குடியிருக்க வேண்டும் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது போலீசார் அங்கு இருந்தார்கள் என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு நான் சென்றபோது போலீசார் இருந்தார்கள் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்திற்கு போலீசார் எவ்வளவு நேரம் கழித்து வந்தார்கள் என்றால் நான் சம்பவ இடத்திற்கு சென்ற பிறகு சுமார் 30 நிமிடம் கழித்து வந்தார்கள். அதற்குப் பிறகுதான் நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றேன் என்றால் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று விபத்து பற்றி கூறிவிட்டு புகார் கொடுக்க சென்றேன்.

5. நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கு தீயணைப்பு துறையினர் மற்றும் போலீசார் இருந்தார்கள் என்றாலும், போலீசார் வழக்கு சம்பவம் பற்றி விசாரித்துக்

கொண்டிருந்தார்கள் என்றாலும் சரியல்ல. நான் புகார் கொடுக்க சென்றபோது தலையாரியும் என்னுடன் வந்தார் என்றால் இல்லை. புகாரை எங்கு வைத்து எழுதினேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து எழுதினேன். நான் சொன்ன இடத்தில் வெடி விபத்து எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பட்டாசு தொழிற்சாலையில் உள்ள கழிவுகளை அகற்றும் போது தான் வழக்கு விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் நடைபெற்றது தொடர்பாக என்னுடைய மேலதிகாரிக்கு தகவல் தெரிவித்தேன் என்றால் சரிதான், போன் மூலம் தகவல் தெரிவித்தேன்.

6. சம்பவ இடத்தை புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். முருகேசன் கள்ளத்தனமாக வெடி தயாரித்த போது சோதனை செய்ததில் தான் விபத்து ஏற்பட்டது என்பதை நான் எத்தனை நபர்களிடம் விசாரித்தேன் என்றால் அங்கு இருந்த சுமார் மூன்று நபர்களிடம் விசாரித்தேன், அவர்களின் பெயர் எனக்கு தெரியாது. வழக்கு விபத்து நடைபெற்றதாக கூறும் வீட்டின் பட்டா மற்றும் கதவு எண் தொடர்பாக போலீசாரிடம் தகவல் மற்றும் ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். யார் மூலம் எனக்கு தகவல் கிடைத்தது என்றால் அந்த விபரத்தை நான் பதிவு செய்து வைக்கவில்லை.

7. நான் சொன்ன நாள், நேரம் மற்றும் இடத்தில் வைத்து புகார் மனு சொன்ன விதத்தில் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேலதிகாரிக்கு எழுத்து மூலமாகத்தான் தகவல் கொடுக்க முடியும் என்றால் எழுத்து மூலமாக தகவல் கொடுத்துள்ளேன். அந்த தகவலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

18 Mar 2026 14:42

Judicial Magistrate 2, Sattur

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : பாலசுப்பிரமணியன் | Father/Husband Name : சண்முகசுந்தரம் |
| Age : 60 | Village : தாயில்பட்டி |
| Taluk : | Calling : கிராம உதவியாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18 Mar 2026 14:44

(A1, A2 charge abated. Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது சல்வார் பட்டி கிராம நிர்வாக உதவியாளராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு தாயில்பட்டி கிராம நிர்வாக உதவியாளராக பணியில் இருந்தபோது, அ.சா.1 கிராம நிர்வாக பொறுப்பு அலுவலராக பணியில் இருந்தார்.

2. 04.04.2019 ஆம் தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில் நானும் அ.சா.1 ம் தாயில்பட்டி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் இருந்தபோது, அ.சா.1 க்கு தொலைபேசி மூலம் தாயில்பட்டி கலைஞர் காலனியில் வெடி விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்தது. நாங்கள் இருவரும் உடனடியாக புறப்பட்டு சம்பவ இடத்திற்கு மதியம் சுமார் 02.15 மணிக்கு சென்றபோது அங்கு தீயணைப்பு துறையினரும், காவல்துறையினரும் இருந்தார்கள். அவர்கள் அங்கு என்ன நடைபெற்றது என்பதை விசாரித்து வைத்திருந்தார்கள்.

3. நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது தீயணைப்பு துறையினர் தீயை அனைத்து வைத்திருந்தார்கள். யாரெல்லாம் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பது தொடர்பாக போலீசார் விசாரணை செய்து எழுதி வைத்திருந்தார்கள். நாங்கள் சென்று சம்பவ இடத்தை பார்த்துவிட்டு, சுமார் 03.00 மணியளவில் வெம்பக்கோட்டை காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றோம். அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur.